69 மார்ச் 14]

திரு. பி. எஸ். மணியன்: மதுரையில் மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் குழுவில் இத்தகைய தீர்மானங்களைக் கொண்டு சென்று தேசிய மாணவர்கள் என்று சொல்லிக்கொண்டு இருவர் அக்குழுவிலிருந்து நீக்கப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்ததா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுதுதான் வந்தது.

திரு ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, சினிமாத் தியேட்டர்களில் படத்தின் கடைசியில் தேசியகீதம் பாடப்படும்போது, பெரும்பாலானவர்கள் வீட்டுக்குப்போகவும், பஸ்களில் இடம் பிடிக்கவும் அவசர அவசரமாக வெளியேறிவிடுகிறார்கள். இதன் காரணமாக, பக்தவத்சலம் சர்க்கார் சினிமாத் தியேட்டர்களில் படம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தேசியகீதம் பாடப்படவேண்டும் என்று உத்தரவு அனுப்பியிருப்பது அரசுக்குத்தெரியுமா? இன்னும், பல தியேட்டர்களில் தேசியகீதம் பாடப்பட்டு அதற்குப் பிறகுதான் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு பேசும்போது, தேசியகீதத்திற்குப் பிறகு நிகழ்ச்சிகளே இருக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார். எனவே, சினிமாத் தியேட்டர்களில் தேசியகீதம் பாடுவதுபற்றிப் பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: படம் ஆரம்பிப்பதற்கு முன்னாலே தேசியகீதம் பாடப்பட வேண்டும் என்று பழைய அரசில்—காங்கிரஸ் அரசில்—ஒரு உத்தரவு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதுபற்றி எனக்கு எதும் தகவல் இல்லை.

திரு. கே. விநாயகம்: நமது மொழிக் கொள்கை எதுவாயிருப்பினும், அந்தக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஆட்சியாளர்களுக்கு எவ்வித மான தடையும் ஏற்படாமல் இருப்பதற்கும், அதே நேரத்தில் தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும், தேசியகீதம் அவர்கள் எந்த மொழியை எதிர்க்கிறார்களோ அந்த மொழியில் இல்லாததன் காரணமாகவும், நமது அரசு "ஆண்டி இந்தி அஜிடேஷன் கவுன்சில்" இல் உள்ளவர்களுக்கு அவர்கள் போகிற போக்கு சரியானதல்ல, நமது நாட்டின் ஒற்றுமைக்கு உகந்ததல்ல என்றும், ஆட்சியாளர்கள் நிரந்தரமாகவே அவர்களுடன், ஒத்துழைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும் எடுத்துச் சொல்லித் திருத்துவதற்கான முயற்சியை இனிமேலாவது செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்றைய தினம் இதுபற்றிக் கேட்கப் பட்ட கேள்விகளும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட விடைகளுமே மாணவர் களுக்கு நல்ல விளக்கமாக அமையும் என்று கருதுகிறேன்.

High-yielding paddy varieties.

* 324 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) whether the high-yielding paddy variety like ADT. 27, TN. 1, IR. 8 and Co. 25 are tried in Chingleput district ; and

(*b*) if so, when, where and the number of acres of land in which such experiments were tried ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை, செங்கற்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், முதலிய வேளாண்மைக் கோட்டங்களில் மிகு பயன் தரும் நெல் வகைகள் 1966-ம் ஆண்டு முன் பருவத்தில் முதலில் பயிரிடப்பட்டன. இது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

பருவம்.	பரப்பு (ஏக்கர்களில்.)
(1) 1966 முன் பருவம் (Khariff) ..	6,213
(2) 1966-67 கோடை பின் பருவம் (Rabi summer 1966-67)	16,457
(3) 1967 முன் பருவம்	23,771
(4) 1967-68 கோடை பின் பருவம்	39,447

திரு. கே. விநாயகம் : பரீட்சார்த்தமாக இந்தப் புதிய நெல் ரகத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்துகிற விஷயத்தில் திருத்தணி ஏன் விடப் பட்டது? அதை ஏன் இத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளவில்லை ? மிகு பயன் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டதனால், விளைச்சல் அதிகம் ஆனதா ? இதனால் விவசாயிகளுக்கு நிரம்ப வருவாய் வந்ததா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : திருத்தணி விடப்பட்ட காரணம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. வை. சுவாமிநாதன்: சி. ஓ. 25 ரகம் மாரிக்காலத்தில் சரியாக விளைச்சலைத் தாராததால், அதை இந்த ஆண்டு மாரிக்காலப் பயிர் இல்லை என்று அரசாங்கம் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சி. ஓ. 25, சி. ஓ. 29 ஆகிய இந்த இரண்டு வகைகளைப் பயிரிட்டு, கடைசி இரண்டு மாதங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதால், ஏ.எஸ்.டி. 5, சி.ஓ. 31 ஆகிய இரண்டு ரகத்தையும் சாகுபடி செய்ய வேண்டுமென்று அதற்கு வேண்டிய விதை நெல் எல்லாம் வாங்கித் தரப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : இன்று நாட்டிலுள்ள உணவு நெருக்கடியை முன்னிட்டு, நாட்டிலுள்ள வயல்கள் அனைத்திலும் மிகு பயன் தரும் நெல் ரகங்களை மட்டும் தான் விளைவிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. விவசாயிகள் அதிகப் பலன் தரும் என்று உணர்கிற காரணத்தால், விவசாயிகளே அதிகக் கண்டுமுதல் ஆகக்கூடிய நெல்லைத் தான் இப்பொழுது சாகுபடி செய்து வருகிறார்கள். பல வசதிகளைக் கணக்கிட்டுப் பார்த்து, ஐ. ஆர். 8, ஆடுதுறை 27 ஆகிய ரகங்களைச் சாகுபடி செய்வது நல்ல பலன் தரும் என்பதை விவசாயிகள் நன்கு உணர்ந்து, மிகப் பயன் தரும் நெல் வகைகளைப் பயிரிடுகிறார்களே தவிர, அவர்கள் இது விஷயத்தில் ஒன்றும் பின் வாங்குவது கிடையாது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்த ஐ.ஆர். 8 என்ற நெல்லை சாகுபடி செய்வதற்கு சாகுபடிச் செலவு அதிகமாகிறது என்று விவசாயி கள் கூறுகிறார்கள். அதனால் ஐ. ஆர். 8 நெல்லைக் கொள்முதல் செய்யும்போது, அதற்கு அரசு சற்று அதிகமான விலை கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஐ. ஆர். 8 சாகுபடி செய்வ தால் அமோக விளைச்சல் ஏற்படுகிறது. நான்கு டன் வரையில் உற்பத்தி யாகிறது. அதனால், அதற்கு விலை குறைத்துக் கொடுத்தால் கூட விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள்.

1969 மார்ச் 14]

திரு. இல. பலராமன் : டி. என். 1 நெல் ரகத்தில் சோகை நோய் வருவதால் விவசாயிகளுக்குப் பெருவாரியான நஷ்டம் ஏற்படுகிறது. அந்தப் பயிரை விவசாயிகள் செய்ய இயலாது என்று சொன்னார்கள். அந்த சோகை நோய் எல்லாப் பயிர்களையும் தாக்கும் என்ற நிலை பரவலாக மக்களிடையே பேசப்படுகிறது. ஆகவே, அதை அரசாங்கம் தடுக்க ஏதாவது மேலும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : டி. என். 1, டி. என். 3 ஆகியவற்றை சாகுபடி செய்யவேண்டாம் என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்து இருக்கிறது. அந்த ரகங்களை விளைவிக்கும்போது ஏற்படக்கூடிய பாக்டீரியல் ப்ளைட் என்னும் கொடிய வியாதியைத் தடுப்பதற்கு வேண்டிய மருந்து வகைகள் இங்கே இல்லை. விவசாயத்திலே அனுபவம் உள்ள விஞ்ஞானிகளும், கோவை விவசாயக் கல்லூரியிலும், அண்ணாமலை விவசாயக் கல்லூரியிலும், மதுரை விவசாயக் கல்லூரியிலும் உள்ள நிபுணர்களும் கருத்துத் தெரிவித்ததையொட்டி அரசாங்கம் அதுபற்றி விவாதித்து ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அதன்படி, டி. என். 1, டி. என். 3 ஆகிய இந்த வகைகளை நமது தமிழகத்தில் சாகுபடி செய்ய வேண்டாம் என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிக்கை விட்டிருக்கிறது. நானே அறிக்கை விட்டிருக்கிறேன்.

திரு. கே. விநாயகம் : செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் இதை அமுலாக்கிப் பயிர் செய்ததாகவும், பல எக்கர்கள் பயிரிடப்பட்டன என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையினால் விவசாயிகளுக்கு என்ன அனுபவம் ஏற்பட்டது ? அவர்களுக்கு லாபம் கிடைத்ததா ? முன்பு விளைந்ததை விட இந்த ரகங்களினால் அமோக விளைச்சல் ஏற்பட்டதா ? அமோக விளைச்சல் ஏற்பட்டிருந்தால், அனுபவம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏ.டி.டி. 27 சாகுபடி செய்ததனால் ஏற்பட்ட நன்மையைக் குறித்து நான் ஒரு கணக்கை அவருக்குத் தர விரும்புகிறேன். 1966-ம் ஆண்டு முன் பருவத்தில் 1,656 கிலோ கிடைத்தது. பின் பருவத்தில் 1,690 கிலோ கிடைத்தது. 1967-ம் ஆண்டில் 1,900 கிலோ கிடைத்தது.

தென்காசி கூட்டுறவு பால் விநியோக சங்கம்.

***325 வினா.—திரு எஸ். ஜே. ராமசாமி** : மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1968-ம் ஆண்டு மே மாதத்தில் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் கூட்டுறவு பால் சங்கத்தில் ரூ. 10,928.00 மோசடி செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அப்பணத்தை வசூலிக்க யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) 1964-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் உள்ள கால அளவில் இச் சங்கத்தின் பணம் ரூ. 17,211-23 வரை கையாடல் செய்யப்பட்டதாகவும், பொய்க் கணக்கு காட்டப்பட்டதாகவும், தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும், விசாரணையிலிருந்து தெரியவருகிறது. இது பற்றி காவல்துறை புலனாய்வு செய்து வருகிறது.

(இ) இச் சங்கத்திற்கு ஏற்பட்ட விரயத்திற்காக, தமிழ்நாட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் விதித் துறைகளின் கீழ், சங்கத்தைச் சேர்ந்த